# QB365 Question Bank Software Study Material

## வரலாறு - அறிவு மலர்ச்சியும், சமூக - அரசியல் மாற்றங்களும் முக்கியமான 2,3 & 5 மதிப்பெண் வினாக்கள் விடைகளுடன்

## 9ம் வகுப்பு

## சமூக அறிவியல்

மொத்த மதிப்பெண் : 74

**2 மதிப்பெண் வினாக்கள்**

10 x 2 = 20

1) மும்மணிகள் (திரி ரத்னா) – இச்சொல்லை விளக்கிக்கூறு.

**பதில் :** மும்மணிகள் (திரி - ரத்னார் என்று அழைக்கப்படும். சமண மதத்தின் முக்கியமான மூன்று கொள்கைகள்
1.நன்னம்பிக்கை
2. நல்லறிவு
3. நன்னடத்தை
**நன்னம்பிக்கை :** மகாவீரரின் போதனைகளில், ஞானத்தில் நம்பிக்கை வைத்தல்
**நல்லறிவு :** கடவுள் இல்லை, உலகம் படைத்தவன் இன்றியே இயங்கி வருகிறது. அனைத்துப் பொருட்களுக்கும் ஆன்மா உண்டு என்ற கருத்துகளை ஏற்பது.
**நன்னடத்தை :** இது மகாவீரரின் ஐம்பெரும் சூளுரைகளைக் கடைபிடிப்பதைக் குறிப்பது.
அவையாவன.
1. எந்த உயிரினத்தையும் துன்புறுத்தலாகாது.
2. நேர்மையுடன் இருப்பது
3.கருணை
4. உண்மையுடன் இருப்பது
5. பிறருடைய உடைமைகளுக்கு ஆசைப்படாமல் வாழ்வது.

2) அஜாதசத்ருவைப் பற்றிக் கூறு?

**பதில் :** (i) பிம்பிசாரரின் புதல்வரான அஜாதசத்ரு பொ.ஆ.மு. 493இல் தனது தந்தையைக் கொன்றுவிட்டு அரியணை ஏறினார்.
(ii) இராணுவ வெற்றிகளின் மூலம் ஆட்சியை விரிவுபடுத்தும் தனது தந்தையின் கொள்கையை இவரும் பின்பற்றினார்.
(iii) மகதத்தின் தலைநகரான ராஜகிருஹக் கோட்டையை வலுப்படுத்திய அதே வேளையில் கங்கைக்கரையில் பாடலிகிராமத்தில் மற்றொரு கோட்டையைக் கட்டினார்.

3) கலிங்கா கல்வெட்டுக் குறிப்பு கூறுவது என்ன?

**பதில் :** அசோகர் தனது கலிங்கக் கல்வெட்டு ஒன்றில் அவர் போர் மற்றும் வெற்றிக்காக நடந்த படுகொலைகளைப் பார்த்துத் தாம் அடைந்த மன வேதனையை பதிவு செய்துள்ளார். மற்றொரு கல்வெட்டில், தாம் இனிமேல் கலிங்கப் போரில் நடந்த படுகொலைகளில் நூற்றில் ஒரு பங்கைக் கூட, ஏன் ஆயிரத்தில் ஒரு பங்கைக் கூட பொறுத்துக்கொள்ள போவதில்லை என்று குறிப்பிட்டுள்ளார்.

4) புத்த சமயத்தைப் பரப்ப அசோகர் மேற்கொண்ட முயற்சிகள் என்னென்ன?

**பதில் :** (i) அசோகர் தனது மகன் மகேந்திரனையும், மகள் சங்கமித்திரையையும் தம்மம் குறித்த தனது செய்தியைப் பரப்புவதற்காக இலங்கைக்கு அனுப்பினார்.
(ii) கி.மு. பொ.ஆ.மு. 250ல் மௌரியத் தலைநகரான பாடலிபுத்திரத்தில் மூன்றாவது புத்த சமய மாநாடு நடைபெற்றது. பௌத்தத்தை மற்ற பகுதிகளில் பரப்ப வேண்டும், மக்களை பௌத்தத்திற்கு மாற்ற சமயப்பரப்பாளர்களை அனுப்ப வேண்டும் என்பது இந்த மாநாட்டின் முக்கியமான முடிவாகும்.

5) ஹீனயானம் மற்றும் மகாயானம் பற்றி குறிப்பு வரைக,

**பதில் :** **பௌத்தத்தில் பிளவு :** கி.மு. பொ.ஆ.மு. 2ஆம் நூற்றாண்டில், கனிஷ்கரின் ஆட்சிக் காலத்தில், பௌத்தத் துறவி நாகார்ஜுனா என்பவர் பௌத்தத்தில் ஒரு சீர்திருத்தத்தைக் கொண்டு வந்தார். பௌத்தம், ஹீனயானம், மஹாயானம் என்று இரு பிரிவுகளாகப் பிரிந்தது.
(i) **ஹீனயானம்** (சிறிய பாதை) -இது புத்தர் போதித்த அசல் வடிவம். இந்த வடிவத்தைப் பின்பற்றியவர்கள் புத்தரைத் தமது குருவாக ஏற்றார்கள். அவரைக் கடவுளாக வழிபடவில்லை. இவர்கள் உருவ வழிபாட்டை மறுத்தார்கள். மக்கள் மொழியான பாலி மொழியையே தொடர்ந்து பயன்படுத்தினார்கள்.
(ii) **மஹாயானம்** (பெரிய பாதை) - புத்தர் கடவுளாக வழிபடப்பட்டார்.போதிசத்துவர் அவருடைய முந்தைய

அவதாரமாகக் கருதப்பட்டார். மஹாயானத்தைப் பின்பற்றுவோர் புத்தர், போதிசத்துவரான சிலைகளை நிறுவி அவர்களது புகழ் பாடும் மந்திரங்களைச் சொல்லி வழிபட்டனர். பின்னர் இவர்கள் தம்முடைய மத நூல்களை சமஸ்கிருதத்தில் எழுதினார்கள். இந்த வகை பௌத்தத்தை கனிஷ்கர் ஆதரித்தார்.

6) கன்பூசியஸ் -ன் ஐந்து நூல்கள் யாவை?

**பதில் :** 1. ஆவண நூல்
2. இசைப்பாடல் நூல்
3. மாற்றம் குறித்த நூல்
4. இளவேனிலும் இலையுதிர் காலமும்
5. வரலாற்று நூல்

7) அஹிர் மஸ்தா குறிப்பு வரைக.

**பதில் :** ஜொராஸ்ட்ரிய சமயத்தின் கடவுள் அஹீர மஸ்தா. ஒளிக் கடவுளான அஹீர மஸ்தா தான் உலகின் ஒரே கடவுள் என ஜொராஸ்டர் பிரகடனம் செய்தார். அஹீர் மஸ்தா அனைத்தும் அறிந்தவர். சகல சக்திகளும் கொண்டவர். எங்கும் நிறைந்திருப்பவர். தீயை வணங்குவதன் மூலம் அவரை வணங்கலாம் என்றார்.

8) மஹாவீரரின் ஐம்பெரும் சூளுரைகள் யாவை?

**பதில் :** மகாவீரரின் ஐம்பெரும் சூளுரைகள்:
எந்த உயிரினத்தையும் துன்புறுத்தலாகாது.
நேர்மையுடன் இருப்பது
கருணை
உண்மையுடன் இருப்பது
பிறருடைய சொத்துக்களுக்கு ஆசைப்படாமல் வாழ்வது.

9) புத்தரின் எண் வழிப் பாதைகளைக் குறிப்பிடுக.

**பதில் :** புத்தரின் எண் வழிப்பாதைகள்:
நல் வாழ்க்கை முறை
நன்னம்பிக்கை
நன் முயற்சி
நல்ல ஆர்வம்
நற்சிந்தனை
நற்பேச்சு
நல்ல தியானம்
நற்செயல்

10) அசோகர் தீவிர புத்தப் பற்றாளராக மாற காரணம் என்ன?

**பதில் :** அசோகர் கலிங்கத்தின் மீது படையெடுத்தார். கலிங்க மக்கள் வீரத்தோடு போர் புரிந்தனர். ஆனால் பெரும் உயிர்பலிகளுக்குப் பிறகு அவர்கள் தோற்கடிக்கப்பட்டனர். இந்தப் போரும் படுகொலைகளும் அசோகரைப் பெரிதும் பாதித்தன. அவர் போரிடுவதை விட்டுவிட முடிவு செய்து தீவிர புத்தப் பற்றாளராக மாறினார்.

## <u>3 மதிப்பெண் வினாக்கள்</u>

8 x 3 = 24

11) இரும்பை உருக்கும் முறை கண்டுபிடிக்கப்பட்ட நிகழ்வு உற்பத்தி மற்றும் போர் முறையை மாற்றியமைத்தது – இதை நிறுவுக.

**பதில் :** 1. இரும்பை அதன் தாதுவிலிருந்து பிரித்தெடுக்கும் முறை கண்டுபிடிக்கப்படுவதற்கு முன் செம்பும் அதன் கலப்பு உலோகமான வெண்கலமும் தான் பயன்பட்டு வந்தன. இவை விலை உயர்ந்தவை.
2. இவற்றின் கூர்முனை விரைவில் மழுங்கிப் போகும் என்பதால் வெண்கலத்தாலான ஆயுதங்களையோ, கலப்பை போன்ற கருவிகளையோ திறம்பட பயன்படுத்த முடியாது.
3. வெண்கலம், செம்புத் தாதுவைவிட இரும்புத் தாதுவளம் இயற்கையில் அபிரிமிதமாகக் கிடைக்கிறது.
4. மேலும் இரும்புக் கோடரி காடுகளைத் திருத்தவும், இரும்புக் கலப்பை இறுகிய நிலத்தைப் பிளக்கவும் விவசாயிகளுக்குப் பெரிதும் உதவியாக இருந்தன.
5. பொ. ஆ. மு. 7 ஆம் நூற்றாண்டின் துவக்கத்தில் இரும்புத் தொழில் நுட்பத்தைப் பயன்படுத்தித்தான் அஸிரியப் பேரரசு வல்லமை பெற்றது.

12) கன்பூசியாத்தின் பந்து முக்கியக் கொள்கைகள் யாவை?

**பதில் :** 1. மனிதத் தன்மை
2. நேர்மை
3. நன்னடத்தை
4. மெய்யறிவு
5. நம்பகத்தன்மை

13) ஜொராஸ்டரின் போதனைகள் யாவை?

**பதில் :** 1. ஒரு மதம் அல்லது ஓர் அரசு அல்லது ஒரு சமூகத்தின் முதன்மையான நோக்கம் ஒழுக்கத்தை வளர்த்தெடுப்பதுதான்.
2. எண்ணம், சொல், செயல் என அனைத்திலும் புனிதமாக இருப்பதுதான் மிக உயரிய மதக் கோட்பாடாகும் என்று ஜொராஸ்டர் போதித்தார்.

14) இந்தியாவில் சமண சமயத்தின் வீழ்ச்சிக்கான காரணங்கள் யாவை?

**பதில் :** 1. அரசர்களின் ஆதரவு இன்மை
2. சமண சமயக் கொள்கையின் கடுமை
3. துறவிகளிடையே காணப்பட்ட குழு மனப்பான்மை
4. புத்த மதத்தின் வரவு

15) போரஸ் ஹைடாஸ்பெஸ் பற்றிக் கூறு.

**பதில் :** 1. நீலம் பகுதியின் அரசர் போரஸ் ஹைடாஸ்பெஸ்.
2. இவர் மாசிடோனியாவின் அலெக்ஸாண்டரை வீரத்தோடு எதிர்த்தார்.
3. போரஸ் போரில் தோல்வியுற்றாலும், மீண்டும் அரியணையில் அமர்த்தப்பட்டார்.
4. அலெக்ஸாண்டரின் மரணத்திற்குப் பிறகு அவருடைய தளபதிகளில் ஒருவர் போரலைக் கொன்று விட்டார்.

16) ஆசிவகம் குறித்து விவரிக்கவும்.

**பதில் :** **ஆசிவகம்:**
(1) பௌத்தமும், சமணமும் தோன்றிய காலத்தில் ஆசிவகம் என்றொரு பிரிவும் தோன்றியது. அதைத் தோற்றுவித்தவர் மக்கலி கோசலர் (மஸ்புத்திர கோசலர் என்பவர்
(ii) இவர் மகாவீரரின் நண்பர், சிறிது காலத்திற்கு இருவரும் சேர்ந்து இருந்திருக்கிறார்கள். பின்னர் கோசலர் பிரிந்து ஆசிவகப் பிரிவைத் தோற்றுவித்தார்.
(iii) நாத்திகப் பிரிவான ஆசிவகம் மனிதர்களின் நிலையை அவர்களுடைய பழைய வினைகள்தான் தீர்மானிக்கின்றன என்று கூறும் வினைப்பயன் (கர்மம்) என்ற கோட்பாட்டை நிராகரித்தது. கோசலர் தர்மமோ, பக்தியோ எந்தவிதத்திலும் மனிதர்களின் இறுதி நிலையைத் தீர்மானிக்காது என்று வாதிட்டார்.
(iv) ஆசிவகர்கள் தென்னிந்தியாவில் சிறு எண்ணிக்கையில் இருந்தார்கள். சோழர்கள் காலத்தில் அவர்கள் மீது ஒரு சிறப்பு வரி விதிக்கப்பட்டது.
(v) புத்தர்களின் இலக்கியமான மணிமேகலை. சமணர்களின் இலக்கிய நூலான நீலகேசி சைவ நூலான சிவஞானசித்தியார் ஆகிய தமிழ் நூல்களில் ஆசிவகத் தத்துவத்தைப் பற்றிய செய்திகள் ஓரளவுக்கு உள்ளன.

17) பௌத்த மதம் இந்தியாவில் வீழ்ச்சியடைந்ததற்கான காரணங்கள் யாவை?

**பதில் :** **கீழ்க்கண்ட காரணங்களால் இந்தியாவில் பௌத்த மதம் வீழ்ச்சி பெற்றது.**
(i) புத்தம் மக்களின் மொழியில் (பாலி) பிரச்சாரம் செய்யப்பட்டதனால் நன்கு பெயர் பெற்றிருந்தது. பிற்காலத்திய நூல்கள் சமஸ்கிருதத்தில் எழுதப்பட்டதால், சாமானிய மக்களுக்கு அவற்றைப் புரிந்துகொள்வது கடினமாக இருந்தது.
(ii) பௌத்தம் ஹீனயானம், மஹாயாளம் என்று பிளவுண்டதும் மற்றொரு முக்கியமான காரணம். மஹாயானத்தில் உருவ வழிபாடு இருந்ததால் பௌத்தத்திற்கும், இந்து மதத்திற்தம் வேறுபாடு இல்லாமல் போனது.
(iii) குப்தர்களின் காலத்தில் பௌத்தம் அரச ஆதரவை இழந்தது.
(iv) மேலும் ஹூணர்கள். துருக்கியர்களின் படையெடுப்புகள் புத்தத்தைக் கிட்டத்தட்ட அழிந்துவிட்டன.

18) ஜொராஸ்டரின் போதனைகள் யாவை?

**பதில் : போதனைகள்:**

(1) ஒரு மதம் அல்லது ஓர் அரசு அல்லது ஒரு சமூகத்தின் முதன்மையான நோக்கம் ஒழுக்கத்தை வளர்த்தெடுப்பதுதான் என்று ஜொராஸ்டர் போதித்தார்.

(II) எண்ணம், சொல், செயல் என அனைத்திலும் புனிதமாக இருப்பதுதான் மிக உயரிய மதக் கோட்பாடாகும்.

(iii) அஹூர மஸ்தாஸ்தாவிடம் ஒளி. 2. நல்ல மனம், 3. நன்மை. 4. அரசாட்சி, 5. பக்தி, 6. ஆரோக்கியம், 7. இறவாத் தன்மை ஆகிய நன்மைகள் உள்ளன என்றார்.

(v) ஜொராஸ்ட்ரிய மதத்தில் பலி, உருவ வழிபாடு ஆகியவை இல்லை கடவரின் வடிவமாகத் தீயை வணங்குவதுதான் உயர்ந்த வழிபாட்டு முறையாகக் கருதப்பட்டது.

(v) தானம் செய்வதற்கும் ஏழைகளுக்குச் சேவை செய்வதற்கும் அதிக முக்கியத்துவம் தரப்பட்டது.

(vi) மனிதர்களின் நற்பண்புகள் என்பவை பிரார்த்தனை, தியானம், யாகங்கள், சடங்குகள் ஆகியவை மட்டும் அல்ல. தீமையை எதிர்த்துப் போராடுவதும், நன்மை செய்ய முயற்சி செய்வதும், அஹூர மஸ்தாவின் செயல்களுக்குத் துணைபுரிவதும் நற்பண்புகள் ஆகும்.

**<u>5 மதிப்பெண் வினாக்கள்</u>** 6 x 5 = 30

19) கன்பூசியஸின் ஐந்து முக்கியமான கோட்பாடுகளை விளக்கிக்கூறு

**பதில் :** கன்பூசியனிசத்தின் ஐந்து முக்கியக் கொள்கைகள்

1. மனிதத்தன்மை
2. நேர்மை
3. நன்னடத்தை
4. மெய்யறிவு
5. நம்பகத்தன்மை

(i) மெய்யறிவு குடும்பத்திலிருந்து தான் வளரும் என்றார் கன்பூசியஸ்.

(ii) ஓர் ஒழுங்கான குடும்பத்தின் கட்டுப்பாடு மிக்க தனிநபர் தான் சமூகத்தின் அடித்தளம் என்கிறார். அவரைப் பொறுத்தவரை மேன்மையான மனிதர் என்பவர் வெறும் அறிவாளியாகவோ, அறிஞராகவோ மட்டும் இல்லாமல், முன்மாதிரியான நடத்தை கொண்டவராகவும் இருக்க வேண்டும்.

(iii) கன்பூசியசின் மேன்மையான மனிதர் புத்திசாலித்தனம், துணிச்சல், நல்லெண்ணம் ஆகிய மூன்று பண்புகளைக் கொண்டவராவார்.

(iv) குழந்தைகள் பெற்றோருக்கும், மனைவி கணவனுக்கும் கீழ்படிய வேண்டும் என்று கன்பூசியஸ் வலியுறுத்தினாலும், "உத்தரவு தவறு என்றால் ஒரு மகன் தனது தந்தையை எதிர்க்க வேண்டும், ஓர் அமைச்சர் அரசரை எதிர்க்க வேண்டும்' என்று தெளிவாக கூறினார்.

(v) 'ஒரு அரசுக்கு மூன்று விசயங்கள் அவசியமானவை, நாட்டில் போதுமான உணவு, இராணுவத் தளவாடங்கள் மற்றும் மக்களுக்குத் தம் ஆட்சியாளர் மீது நம்பிக்கை இருக்க வேண்டும்" என்றார்.

20) சமண, புத்த சமயக் கொள்கைகளுக்கு இடையேயான ஒற்றுமைகளையும் வேறுபாடுகளையும் எழுதுக

**பதில் : சமண சமயம்:**

(1) சமண சமயத்தின் 24வது தீர்த்தங்கரர் வர்த்தமானர் ஆவார்.

(ii) இவர் மூன்று ரத்தினம் எனப்படும் நல்லறிவு, நன்னம்பிக்கை மற்றும் நன்னடத்தையை போதித்தார்.

(iii) அகிம்சை மற்றும் எந்த உயிரினங்களையும் துன்புறுத்தாமை ஆகியவற்றில் அதிக நம்பிக்கை வைத்திருந்தார்.

(iv) உயிர்பலி கூடாது என்றார்.

(v) மகாவீரர் சாதிமுறையை ஏற்கவில்லை அனைத்து மதமும் சமம் என்றார்.

(vi) சமண சமயத்தின் இரு பிரிவுகள்

(i) திகம்பரர்கள் (திசையையே ஆடையாக உடுத்தியவர்கள்)

(ii) சுவேதாம்பரர்கள் (வெண்ணிற உடை உடுத்தியவர்கள்)

(vii) சமணர்கள் தங்கள் கொள்கைகளை வட்டார மொழிகளிலே போதித்தனர்.

(viii) சந்திரகுப்தர், மகேந்திரவர்ம பல்லவன் சமண சமயத்தை தழுவியவர்கள்.

**புத்த சமயம்:**

(i) புத்த சமயத்தைத் தோற்றுவித்தவர் புத்தர்.

(ii) இவரின் எண் வழிப்பாதை நன்னம்பிக்கை, நல்ல ஆர்வம், நற்பேச்சு, நற்செயல், நல்வாழ்க்கை முறை, நன் முயற்சி, நற்சிந்தனை மற்றும் நல்ல தியானம் ஆகும்.

(iii) அன்பை அகிம்சை வழியில் எல்லா உயிரினங்களும் வெளிப்படுத்த முடியும் என்று வலியுறுத்தினார்.

(iv) உயிர்பலி கூடாது என்றார்.

(v) சாதிமுறையை ஏற்கவில்லை.

(vi) புத்த சமயம் மஹாயானம் மற்றும் ஹீனயானம் என்று இரு பிரிவுகளாக பிரிந்தது.

(vii) புத்தர், மக்கள் பேசும் பிராகிருத மொழியில் தனது போதனைகளை போதித்தார்.

(viii) அசோகர், கனிஷ்கர் புத்த சமயத்தை தழுவியவர்கள்.

21) சமண, பௌத்த சமயங்களின் வீழ்ச்சிக்கான காரணங்கள் யாவை?

பதில் : **சமணத்தின் வீழ்ச்சி:**

1. அரசர்களின் ஆதரவின்மை
2. சமண சமயக் கொள்கையின் கடுமை
3. துறவிகளிடையே காணப்பட்ட குழு மனப்பான்மை
4. சமணத்தில் ஏற்பட்ட பிளவு
5. புத்த சமயத்தின் வரவு ஆகியனவாகும்

**பொந்தத்தின் வீழ்ச்சி:**

1. பௌத்தம் மக்களின் மொழியான பாலியில் பிரச்சாரம் செய்யப்பட்டது. ஆனால் அதன் நூல்கள் சமஸ்கிருதத்தில் எழுதப்பட்டதால் சாமானிய மக்களுக்கு அவற்றைப் புரிந்து கொள்வது கடினமாக இருந்தது,
2. பௌத்தம் ஹீனயானம், மஹாயானம் என்று பிளவுண்டது மற்றொரு காரணமாகும்.
3. மஹாயானத்தில் உருவ வழிபாடு இருந்ததால் பௌத்தத்திற்கும் இந்து மதத்திற்கும் வேறுபாடு இல்லாமல் போனது.
4. குப்தர்களின் காலத்தில் பௌத்தம் அரச ஆதரவை இழந்தது.
5. மேலும் ஹூணர்கள், துருக்கியர்களின் படையெடுப்புகள் பௌத்த மதத்தை கிட்டத்தட்ட அழித்து விட்டன

22) தாவோயிசம் பற்றி விவரி

பதில் : **தாவோயிசம்:**

(1) கன்பூசிய காலக்கட்டத்திற்கு முந்தைய தத்துவஞானிகளில் தலைசிறந்தவர் லாவோட்சே,
(ii) இவர் கன்பூசியஸை விட 53 வயது மூத்தவர். வாவோட் சே கி.மு பா.ஆ.மு 604ல் பிறந்தார்.
(iii) அந்தக் காலகட்டத்து அரசியல்வாதிகளின் முறைகேடுகள். ஊழல்கள் ஆகியவற்றால் மணம் வெறுத்த அவர் நாட்டை விட்டு வெளியேறி, ஒரு உறைவிடத்தில் அம்மதியாக வாழ்ந்தார். (iv) ஐயாயிரம் சொற்கள் கொண்ட ஒரு நூலை இரண்டு பாகங்களாக எழுதினார். பின்னர் அவர்
அந்த இடத்திலிருந்து அகன்று சென்றார். அவர் எங்கே இறந்தார் எனத் தெரியவில்லை. அவரது நூலான தாவோ டே ஞிங் என்பது வாழ்க்கைக்கான வழிகாட்டியாகும்.

**லாவோட்சேவின் போதனைகள் (தாவோயிசம்);**

(i) உலகில் மனிதர்களின் மகிழ்ச்சியின்மைக்கு காரணம் மனிதர்களின் சுயநலம்தான் சுயநலம் என்பது நிறைவு செய்ய இயலாத அளவற்ற ஆசைகளை மனிதர்களுக்கு ஏற்படுத்துகிறது. (1) இயற்கையில் அனைத்துமே இயற்கை வழியிலேயே இயங்குகின்றன. மனித நடத்தைக்கான விதி இயற்கையோடு பொருத்தியிருக்க வேண்டும்
(ii) மனிதர்கள் யாரோ ஒருவர் ஒழுங்குபடுத்திய ஒரு வாழ்க்கையை வாழ்கிறார்கள். அறிவைப் பெற்ற மனிதர்கள் தமது களங்கமில்லாத தன்மையை இழந்ததுதான் இதற்குக் காரணம். தமது திரட்டப்பட்ட அறிவினைக் கொண்டு அவர்கள் ஒரு நகர நாகரிகத்தை ஏற்படுத்தி, தம்மைத்தாமே மகிழ்ச்சியற்றவர்களாக ஆக்கிக் கொள்கிறார்கள்.

23) கண-சங்கங்கள் என்றால் என்ன? அவைகளைப் பற்றி விவரி.

**பதில் :** (i) மகாவீரர், புத்தர் ஆகியோர் காலத்தில் முடியாட்சிகள், கண-சங்கங்கள் எனப்படும் குலக்குழு ஆட்சி என்று இரு வேறுபட்ட அரசு வடிவங்கள் இருந்தன.

(ii) வேத சடங்குகளைச் செய்ய மறுத்தல், வர்ணாசிரம முறையை எதிர்த்தல் ஆகியவை மூலம் கண சங்கங்கள் முடியாட்சிகளுக்கு ஓர் அரசியல் மாற்றத்தைத் தந்தன.

(iii) சாக்கியர்கள், கோலியர்கள், மல்லர்கள் போல் கண-சங்கங்கள் ஒரே ஓர் குலத்தால் ஆனவையாகவும் இருந்தன. அதே நேரத்தில் விரிஜ்கரிகள், விருஷ்ணிகள் (இது வைசாலியில் இருந்த ஒரு கூட்டமைப்பு) போன்று பல குலங்களின் கூட்டமைப்பாகவும் இருந்தன.

(iv) கண-சங்கங்களில் சத்திரிய ராஜகுலம் என்ற ஆளும் குடும்பங்கள், அடிமைகளும் தொழிலாளர்களும் அடங்கிய தால கர்மகாரர்கள் என இருவகையான சமூகப் படிநிலைகள்தான் இருந்தன. தாஸ கர்மகாரர்களுக்கு சபையில் பிரதிநிநித்துவம் கிடையாது.

(v) கண-சங்கங்களில் வேறுபல மத வழிபாட்டுப் பழக்கங்களும் அனுமதிக்கப்பட்ட பண்பு இருந்தது. இது முடியாட்சிகளில் நிலவிய சமூக கலாச்சார முறைக்கு நேர்மாறானது.

(vi) கண-சங்கங்களில் குலத்தின் தலைவர் மற்ற குடும்பங்களின் தலைவர்களைக் கொண்ட சபைக்குத் தலைமை தாங்குவார்.

(xi) இந்த சபை கண - சங்கங்களின் விவகாரங்கள் குறித்து விவாதிக்கும். ஒத்த கருத்துடன் கூடிய முடிவு எட்டப்படவில்லை என்றால் வாக்கெடுப்பிற்கு விடப்படும்.

(vii) தலைவருக்கு ஆலோசகர்கள் இருந்தார்கள் பிற்காலங்களில் மிக விரிவான நீதி வழங்கும் நடைமுறைகள் உருவாகின

(ix) கலா-சங்கத்தின் வருவாய் முக்கியமாக வேளாண்மையிலிருந்தும் கால்நடை மேய்ச்சலிலிருந்தும் இது பஞ்சாப் மற்றும் தோஆப் பகுதியில் மட்டும்) ரளவிற்கு வர்த்தகத்திலிருந்தும் வந்தது.

(x) வ. மேற்கின் தலைவர்களுக்கு வருவாய் பெருமளவு வர்த்தகத்திலிருந்துதான் வந்தது. நிலம், இனக்குழு மொத்தத்திற்கும் சொந்தமாக இருந்தது.

(xi) அவற்றில் தாஸ கர்மகாரர்கள் வேளாண்மை செய்தார்கள். வீட்டு வேலைகளில் மட்டும்தான் அடிமைகள் உடுபடுத்தப்பட்டார்கள். உற்பத்தியில் அடிமைகளை ஈடுபடுத்தும் வழக்கம் இல்லை.

24) மௌரிய ஆட்சி நிர்வாகம் பற்றி எழுதுக.

**பதில் :** 1. மௌரியர்கள் செயல்திறன் மிக்க அரசாட்சி முறையை உருவாக்கினர். நிர்வாகத்தின் தலைவர் அரசர்.

2. அரசருக்கு அமைச்சர் குழு உதவிபுரிந்து மகாமாத்ரேயர்கள் என்ற அதிகாரிகள் அமைச்சர்களுக்குச் செயலாளர்களாகப் பணியாற்றினார்கள்.

3. வருவாய், செலவினங்களுக்கு பொறுப்பான அதிகாரிசமஹர்த்தா என்று அழைக்கப்பட்டார்.

4. பேரரசு நான்கு மாநிலங்களாகப் பிரிக்கப்பட்டிருந்தது. அவற்றை ஆளுநர்கள் ஆட்சி செய்தனர்.

5. மாவட்ட நிர்வாகம் ஸ்தானிகா என்பவரின் கீழ் கொண்டு வரப்பட்டது.

6. பத்து கிராமங்களை கோபர் என்பவறும், நகர நிர்வாகத்தைநகரகா என்பவறும் நிர்வகித்தனர்.

7. நகரம் ஆறு குழுக்களைக் கொண்டு நிர்வகிக்கப்பட்டது.

8. ராணுவம் 30 பேர் கொண்ட குழுவால் நிர்வகிக்கப்பட்டது.

9. மக்கள், கால்நடைகளை கிராமணி கணக்கெடுத்தார்.

10. சிறந்த உளவுத் துறை இயங்கியது.

11. எல்லா ஊர்களிலும், நகரங்களிலும் நீதி வழங்க நீதி மன்றங்கள் அமைக்கப்பட்டன.